# ஈழ அகதிகள்:

# தொடரும் துயரம்

**தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழ அகதிகள் மூன்றாந்தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். நொந்த மாட்டை காக்கை கொத்துவது போல பல வழிகளிலும் அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள்.**

"இனி நான் நாடு திரும்ப மாட்டேன்; வெளியேறும்படி நிர்பந்தித்தால் நான் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொள்வேன்" - எலும்பும் தோலுமான 24 வயதான மகேஸ்வரி. தனது இரு குழந்தைகளுடன் 1990 ஆகஸ்ட் மாத மத்தியில் மண்டபம் முகாமுக்கு வந்த ஆயிரக்கணக்கான இலங்கை தமிழ் அகதிகளில் அவரும் ஒருவர். மன்னாருக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்.

சிங்கள ராணுவத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவரது உடல் நடுங்குகிறது. "அன்று நள்ளிரவில் திடீரென துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ஆறு ராணுவ லாரிகளில் சிங்கள ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே வந்தனர். குழந்தைகளை தூக்கிக் கொண்டு நாங்கள் காட்டை நோக்கி ஓடினோம். திடீரென வானிலிருந்து ஹெலிகாப்டர்கள் குண்டு வீசின. சிங்கள ராணுவத்தினர் எங்களை துரத்திக்கொண்டே சுட்டனர். எனது இளைய சகோதரன் என் கண் முன்னே துடிதுடித்து இறந்தான். இரு நாட்கள் பட்டினி கிடந்து கள்ளத் தோணியிலே இங்கு வந்து சேர்ந்தேன்" என்று பயபீதியுடன் விசும்பிக்கொண்டே அவர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையில் யார்தான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஈழத்தில் வாழ முடியும்? 1983 ஜூலை இனக்கலவரத்துக்குப் பிறகு 3 லட்சம் பேர் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர். பாசிச ராஜீவின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு பாதிக்கும் மேற்பட்ட அகதிகள் நாடு திரும்பிவிட்டதாக அரசு கணக்கு காட்டியது. ஆனால், இந்த துரோக ஒப்பந்தம் கழிப்பறைக் காகிதமாகி, 1990ல் சிங்கள அரசு பயங்கரவாதிகள், புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் சிவிலியன்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஏவத் தொடங்கியதும், இந்தியாவுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை 4 மடங்காக அதிகரித்தது. உத்தேச மதிப்பீட்டின்படி ஏறத்தாழ இரண்டரை லட்சம் தமிழ் அகதிகள் இப்போது இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் 1,20,000 பேர் அரசு ஏற்பாடு செய்துள்ள அகதி முகாம்களிலும், மற்றவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலுமாக பல்வேறு இடர்பாடுகளுக்கு நடுவே வாழ்க்கையைத் தள்ளுகின்றனர். தமிழகத்திலுள்ள 243 முகாம்களில் அரசின் நிவாரண... காக கையேந்தி நிற்கும் தமிழ் அ... நிலைமை சோகத்திலும் துயரமான... ளது.

சிமெண்ட் தகடுகளைக் ... கூரைக் கொட்டகை; குடிநீர், ... கழிப்பறை வசதிகளற்ற இருப்பிட... துவ வசதிகள் மருந்துக்குக்கூட கி... மாதத்திற்கு 150 ரூபாய் நிவாரணத்... மானிய விலையில் வழங்கப்படும் ... போன அரிசி — இந்த அற்ப நி... தைக் கொண்டுதான் அவர்கள் வா... டும்.

சிறிய பெட்டி போன்ற சிமெ... களைக் கொண்ட வீடு; அதில் பெ... மறைவிட வசதி ஏதும் கிடையாது ... காலத்தில் இந்த வீடுகளில் ஒரு நி... நிற்க முடியாது. ஆஸ்பஸ்டா... ளைக் கொண்ட இந்த வீடுகள் ... சூளையிலிருப்பதைப் போல அ... கும். "பெரியவர்கள் எப்படியா... ளிக்கலாம்; ஆனால், கைக்கு... வைத்துக்கொண்டு நாங்கள் ப... யைச் சொல்லி மாளாது. எங்கள் ... ளில் பலருக்கு கடந்த ஆண்டி... நோய் தாக்கியது. எந்த மருத்து... எங்களுக்கு கிடைக்கவில்லை" ... தென்னாற்காடு மாவட்டம் கன... கிராமத்திலுள்ள அகதி முகாமி... ஒரு தாய்.

"எங்களுக்கு முன்னைப் ... ணத் தொகையும் ரேஷன் ... உரிய காலத்தில் கிடைப்பதி... மாதத்துக்கு 5 லிட்டர் மண்... தருகிறார்கள். அதைக்கொண்... நாங்கள் சமைக்க முடியும்? ப... அலைந்து விறகு பொறுக்கி ... டியோ சமாளிக்கிறோம். ம... ளில் எங்கள் பாடு திண்ட... என்று வேதனையுடன் கூறுகிற... குப்பம் கிராமத்திலுள்ள முகா... தெரசம்மா எனும் மூதாட்டி.

தமிழகத்திலுள்ள அகதி ... முகாம்களிலேயே கனகரா... முகாம்தான் மிக மோசமான நி... ளது. சிதம்பரத்திலிந்து 7 கி.மீ... லுள்ள இந்த முகாமில் குடிநீர் ... கிடையாது. பெண்களுக்கு ... குளியலறையோ அங்கு இல்ல... எந்த மருத்துவ வசதியும் ... செய்துதரப்படவில்லை.

கனராம்பட்டிலுள்ள ... கூட கொட்டகை இற்றுவி... உள்ளது. மழைக்காலத்தில் ... சமைப்பார்கள் என்றே புரிய... கள் தினமும் ஆற்றைக் க... தொலைவுக்குச் சென்று வி... வந்து சமைக்கிறோம். மழை... கொஞ்சம் விறகை சேமித்து ... வசதி ஏதுமில்லை. ஆண்ட... ளைக் காப்பாற்ற வேண்டு... வள்ளியம்மை எனும் தாய்.

இதர அகதி முகாம்க... இதே நிலையில்தான் உ... வடக்கு பிச்சாவரத்திலுள்ள ... சற்று மேம்பட்ட நிலையில் ...

அனிச்சன் குப்பத்திலுள்ள அனல் கக்கும் பெட்டி வீடுகள். அடிப்படை வசதி ஏதுமின்றி அவதிப்படும் அகதிகள்.

